பக்கங்கள் 16+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 20 திங்கட்கிழமை 06.10.2025 | அதிர்வு 67

## மன்னாரில் ரயிலில் மோதி இளைஞர் ஒருவர் மரணம்!

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் தலைமன்னாரிலிருந்து கொழும்பு – கோட்டை நோக்கிச் செல்லும் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்துள்ளார். 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில்

# இலங்கை மீதான புதிய பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இன்று திங்கட்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட புதிய பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

"இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை களை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக் கப்பட்டது. 02

## வவுனியாவில் கோர விபத்து! இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!!



(கி.வசந்தன்)

வவுனியா – இராசேந்திரம்குளம் பகுதியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மோட்டர் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள் ளதுடன், இருவர் காயமடைந்துள் 02



கடுகண்ணாவையில்

## ரயிலில் மோதி ஒருவர் மரணம்!

கடுகண்ணாவை ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.

கண்டியில் இருந்து பொல்கஹவெல நோக்கிச் சென்ற ரயிலில் மோதியே மேற்படி நபர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தவர் அக்குரஸ்ஸ –கனத் தொட்ட பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட இளங்கலைமாணி ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கைலாசபதி கலைய ரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாக விருக்கும் இந்த ஆய்வுமாநாட்டில் முதன்மை விருந்தினராக பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ள வுள்ளார். ஆய்வு மாநாட்டுக்கு கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமை தாங்கவுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத் தின் சமூக விஞ்ஞானத்துறை ஓய்வு நிலைப் பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் திறப்புரையை ஆற்றவுள்ளார்.

இம்முறை நடைபெறும் ஐந்தாவது மாநாடு “வெவ்வேறு துறைகளை இணைத்து மாற்றங்களை வலுவூட்டு வதற்காக அறிவைச் செயற்படுத் துதல்” என்னும் தொனிப்பொருளோடு




16 ஆய் வுத் தடங்களில் நடைபெறவுள் ளது.

இளங்கலைமாணி பட்டக்கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவு றுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இந்த மாநாடு அமையவுள்ளது.

# யாழில் மோட்டார் சைக்கிள் மீது லொறி மோதி இருவர் படுகாயம்

யாழ். பலாலி வீதி – புன்னாலைக்கட்டு பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இரு முதியவர்கள் படுகாயம டைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ வாகனம் ஒன்று யாழ்ப்பா ணத்தில் இருந்து பலாலி நோக்கி சென்று கொண்டிருந்த போது, இராணுவ வாகனத் தின் பின்னால் வந்த லொறி ஒன்று இரா ணுவ வாகனத்தை முந்திச் செல்ல முற் பட்ட வேளை பலாலி பக்கம் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அந்த லொறி மோதியது.

இந்த விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு முதியவர்களே படுகாயமடைந்துள்ளனர்.

விபத்து சம்பவம் குறித்து விசாரணை களை சுன்னாகம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

## மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸ ார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளனர் என்று நெளுக்குளம் பொலி ஸார் தெரிவித்தனர். இன்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, இராசேந்திரகுளம் பகுதி யில் இருந்து நெளுக்குளம் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூன்று இளைஞர்கள் பயணித்துள்ளனர்.

அந்த மோட்டர் சைக்கிள் இராசேந் திரகுளம் பாடசாலை முன்பாகவுள்ள பஸ் தரிப்பு நிலையத்துடன் கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பய ணித்த இளைஞர் ஒருவர் மரண மடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலயில் சிகிச்சைக்கக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் சாம்பல்தோட்டம் பகுதி யைச் சேர்ந்த கோபால்ராஜ் நிலக்சன் (வயது 18) என்பவரே மரணமடைந் தவராவார்.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே கடந்த மாத ஆரம்பத்தில் இந்தப் பிரேரணையின் முதலாவது வரைவு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அதில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன. அந்தவகையில் திருத்தப்பட்ட இறுதி வரைவு இன்று சமர்ப்பிக்கப்பட்டு, இன் றைய தினமே வாக்கடுப்பின்றி நிறைவேற் றப்பட்டது.

இலங்கை மீதான ஐ.நா. மனித உரி மைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அதிகாரத்தை நீடிக்கும் தீர்மானத்துக்கு அதனை இன்று திங்கட்கிழமை முன் வைத்த பிரதான 5 நாடுகளுக்கும் மேலாக மேலும் 22 நாடுகள் இணை அனுசரணை வழங்கி இருந்தன.

பிரிட்டன் தலைமையில், கனடா, மாலாவி, மொன்டினீக்ரோ மற்றும் வட மசிடோனியா ஆகிய இணை அனுச ரணை நாடுகளால் தயாரிக்கப்பட்ட இந்தப் புதிய பிரரேணையின் முதலாவது வரைவு கடந்த செப்டெம்பர் மாதம் 9 ஆம் திகதி வெளியிடப்பப்பட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இந்தப் பிரரேணை இன்று நிறைவேற்றப்படும் போது இலங்கை அரசு வாக்கெடுப்பைக் கோராமல் இருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் கடந்த செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமானது. இந்நிலையில், நாளை மறுதினம் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி யுடன் கூட்டத் தொடர் நிறைவடைகின்ற நிலையில் அதற்கு முன்னதாக இன்று இலங்கை மீதான மீதான புதிய பிரே ரணை நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இலங்கை அரசு இந்தப் புதிய தீர்மானத்தையும் சர்வதேச தலை யீட்டையும் தொடர்ந்து மறுத்து வரு கின்றது.



# இலங்கைக்கு கடத்த பதுக்கி வைக்கப்பட்டிருந்த 10 லட்சம் ரூபா கடல் அட்டைகள் பறிமுதல்!

## கியூ பிரிவு பொலிஸார் நடவடிக்கை

(மன்னார் நிருபர்')

இலங்கைக்கு கடத்துவதற்காக இராமநாதபுரம் அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மதிப்பிலான 10 லட்சம் ரூபா மதிப்புள்ள 250 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்த கியூ பிரிவு பொலிஸார் கடல் அட்டைகளைப் பதுக்கி வைத்திருந்த ஒருவரை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

இராமநாதபுரம் சக்கரக்கோட்டை நகராட்சி குப்பை கிடங்கு பகுதியில் இலங்கைக்கு கடத்துவதற்காக கடல் அட்டைகள் பதப்படுத்தி வருவதாக கியூ பிரிவு ஆய்வாளர் ஜானகி கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் இரவு (04) கியூ பிரிவு பொலிஸார் அந்தப் பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

அப்போது நகராட்சி குப்பைக் கிடங்கு அருகே குடோன் அமைத்து அதில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை பதப்படுத்தி வந்தனர்.

இதனை கண்ட கியூ பிரிவு பொலிஸார் கடல் அட்டைகளை பதப்படுத்திய கும்பலை மடக்கி பிடிப்பதற்காக சுற்றி வளைத்த நிலையில் தேவி பட்டினத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டும் பிடிபட்ட நிலையில் அங்கிருந்த மூவர் தப்பி ஓடினர்.

இந்த நிலையில் அவரிடம் நடத்திய விசாரணையில் தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை தேவிபட்டினத்தில் இருந்து வாங்கிவந்து சக்கர கோட்டை குப்பை கிடங்கு அருகே உள்ள குடோனில் பதப்படுத்தி பின்கடல் வழியாக இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து அந்த குடோனில் இருந்த இந்திய மதிப்பில் 10 லட்சம் ரூபா மதிப்பிலான 250 கிலோ பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் மற்றும் கடல் அட்டைகளைப் பதப்படுத்தப் பயன்படுத்தப்படும் பொருள்கள் உள்ளிட்டவற்றை கியூ பிரிவு பொலிஸார் பறிமுதல் செய்து இராமநாதபுரம் வனத்துறை அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

இராமநாதபுரம் புறநகர் பகுதியில் கடல் அட்டைகளைப் பதப்படுத்தி இலங்கைக்குக் கடத்த பதுக்கி வைக்கப்பட்டிருந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.





# விபுலானந்தாவில் சிறுவர் தின விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மொன்டிசோரி முன்பள்ளிப் பாடசாலையின் வருடாந்த சர்வதேச சிறுவர் தின விளையாட்டு விழா நேற்று முன்தினம் மாலை காரைதீவு கடற்கரையில் மொன்டிசோரி ஆசிரியர்களான ஜெயநிலந்தினி மற்றும் ரம்யா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக காரைதீவின் பிரபல தொழிலதிபர் விஸ்வநாதன் சந்திரமோகன் மற்றும் பாடசாலைப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கடற்கரையில் சிறுவர் விளையாட்டு விழா சிறப்பாக நடைபெற்றது. விநோத உடைப்போட்டியும் ஜனரஞ்சகமாக நடைபெற்றது.



# உலக உளநல தினத்தை முன்னிட்டு கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள்

**(மட்டக்களப்பு)**

ஒக்ரோபர் 10, உலக உளநல தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சர்வ தேச உளவியல்சார் கற்கைகள் நிலையம் கட்டுரை மற்றும் கவிதைப்போட்டிகளை நடத்தவுள்ளது.

மேற்படி கல்வி நிலையத்தின் நிறை வேற்றுப் பணிப்பாளரும் உளசமூக ஆதரவு இல்லத்தின் தலைவியுமான தேவரஞ்சினி பிரான்சிஸ் தலைமையில் நத்தப்படும் இப்போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு கொழும்பு எம்.ஐ.யூ. பல்கலைக்கழகம் மூலம் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்படும். போட்டியில் வெற்றி பெறும் ஆறு மாணவர்களுக்கும் உளவியல் விருது மற்றும் பரிசுகள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

அகில இலங்கை ரீதியாக இடம் பெறவுள்ள இந்தப் போட்டிகளில், பாட சாலையில் கல்வி பயிலும் தரம் 10,11 மற்றும் உயர்தர மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியும்.

“உலக மனநல கூட்டமைப்பின் அவ சியம்” எனும் தலைப்பில் ஆயிரம் சொற் களுக்கு மேற்படாமல் கட்டுரை அமைதல் வேண்டும்.

“மனநலமும் கூட்டமைப்பும்” எனும் தலைப்பில் ஐம்பது வரிகளுக்கு மேற் படாமல் கவிதை அமைதல் வேண்டும். (புதுக்கவிதை அல்லது மரபு கவிதை)

ஒருவர் ஒரு போட்டியில் மாத்திரம் பங்கு பற்றுவதுடன் கட்டாயம் ஆக்கங்கள் கணினியில் அச்சிடப்பட்டு பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தி அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஆக்கங்கள் யாவும் பணிப்பாளர், சர்வதேச உளவியல்சார் கற்கைகள் பிராந்திய நிலையம், இல. 25-3, 4 ஆம் குறுக்கு, கல்லடி, வேலூர், மட்டக் களப்பு என்ற முகவரிக்கு அனுப்பி வைத் தல்வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வறிய குடும்பத்துக்கான புதிய வீடு புத்தளம் நவடங்குளத்தில் கையளிப்பு

**(கற்பிட்டி எம். எச். சியாஜ்)**

புத்தளம் மாவட்டத்தின் முந்தல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நவடங்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட வறிய குடும்பம் ஒன்றுக்கு நிரந்தர வீடொன்று அரச நிதியுதவியுடன் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஜே. எம் பைசல் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்று விடு கையளிக்கப்பட்டது.





# வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் கப்பல் திருவிழா நாளை செவ்வாய்!

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தின் வரலாற்றை விளக்கும் திருவிழாவான கப்பல் திரு விழா நாளை செவ்வாய்க்கிழமை நடை பெறவுள்ளது.

கப்பல் திருவிழாவுக்கு பெருந்திரளான பக்தர்கள் திரள்வார்கள் என்று எதிர் பார்ப்பதால் அவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த புதன்கிழமை ஆரம்பமான அலங்கார உற்சவத்தின் வேட்டைத் திருவிழா 8 ஆம் திகதி புதன்கிழமையும் சப்பறத்திருவிழா ஒன்பதாம் திகதி வியாழக்கிழமையும் சமுத்திர தீர்த்த திருவிழா 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கேணித் தீர்த்தத் திருவிழா 11 ஆம் திகதி சனிக்கிழமையும் இடம்பெறும் என ஆலய பரம்பரை நம்பிக்கை பொறுப்பாளரும் பரிபாலன சபையினரும் அறிவித்துள் ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தீர்வில்லா நெருக்கடி

கட்டுநாயக்காவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் தற்போது அதன் திட்டமிட்ட கொள்ளளவைத் தாண்டி அதிகமாக இயங்கி வருகின்றது. இந்நிலையில், குளிர்காலத்திற்காக வாரத்திற்கு கூடுதல் விமான இடங்களுக்கான சுமார் 40 புதிய கோரிக்கைகள் வந்துள்ளன. ஆனால் அவற்றில் பெரும்பாலானவை ஏற்கனவே குறைந்த இடவசதி காரணமாக நிராகரிக்கப்பட்டுள்ளன என்று சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் கொழும்பில் பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற 'சர்வதேச சுற்றுலாத் தலைவர்கள் உச்சி மாநாடு - 2025' இல் பேசிய பிரதி அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

திட்டமிடப்பட்ட விமான நடவடிக்கைகள் மற்றும் வாடகை விமானங்களுக்கான இந்த நாற்பது புதிய கோரிக்கைகளில் ஒரு சில விமான நிறுவனங்கள் மட்டுமே மத்தள விமான நிலையத்தை மாற்று விமான நிலையமாகத் தேர்ந்தெடுத்துள்ளன. ஆனால் பல விமான நிறுவனங்கள் வாய்ப்புகள் இல்லாததால் அந்த யோசனையை கைவிட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் ஆரம்பத்தில் ஆண்டுக்கு ஆறு மில்லியன் பயணிகளைக் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஆனால் தற்போது ஆண்டுக்கு 10 மில்லியன் பயணிகளை அது கையாள்வதாக பிரதி அமைச்சர் மேலும் கூறினார்.

சுமார் ஆறு தசாப்தங்களாக விமான நடவடிக்கைகளை எளிதாக்கி வரும் கட்டுநாயக்க விமான நிலையம், தற்போது இரண்டு ஓடுபாதைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்த உள்கட்டமைப்பு மற்றும் திறன் சவால்களை நிவர்த்தி செய்வது ஒரு முன்னுரிமை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக கையாள்வதற்கு இரண்டு வழிகள்தான் இருக்க முடியும்.

ஒன்று - அந்த விமான நிலையத்தை விரிவுபடுத்துவது. அதற்கு அருகில் இருக்கும் கட்டுநாயக்கா விமானப்படைத்தளத்தை மத்தள போன்ற இடத்துக்கு மாற்றி, சர்வதேச விமான நிலையத்தை கட்டுநாயக்காவில் மேலும் விரிவுபடுத்தி மேம்படுத்த வேண்டும். அதற்கும் அரசு இணங்குவதாக இல்லை.

அடுத்தது - நாட்டின் பிற சர்வதேச விமான நிலையங்களை மேம்படுத்துவது. அதிக பயணிகள் வரக்கூடிய வாய்ப்பு மிக்க பலாலி சர்வதேச விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள், உதவிகள், சூழ்நிலைகள், சந்தர்ப்பங்கள் எல்லாம் இருந்தும் தமிழர் தேசத்தில் ஒரு பிரதேசம் வளர்ந்து விடும் என்ற பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்க சிந்தனைக் காரணம் கொண்டு மட்டும் அந்த முயற்சிக்கு ஆப்படிக்கின்றது கொழும்பு ஆட்சிப்பீடம்.

இப்படித் தீர்வுக்கான சகல வழிகளையும் அடைத்துக் கொண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பது என்பது சாத்தியப்படக்கூடிய விடயம் அல்ல.




# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று பொன் விழா கொண்டாட்டங்கள் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளன.

ஈழத் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து, இன்று பொன்னகவைப் பெரு விழா காண்கிறது.

இலங்கை பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகமாக 1974 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 06 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்ட இந்த உயர்கல்வி நிலையம், இன்று யாழ்ப்பாணப் பல் கலைக்கழகமாக வியாபித்து நிற்கிறது.

ஐம்பதாவது ஆண்டைக் கடந்திருக்கும் இப்பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டு பீடங்களும் இணைந்து பொன்விழா

தொடர்ச்சி▼


















# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்கள்

தொடர்ச்சி▲

நிகழ்வை இன்று 06 ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றன.

காலை 09.00 மணிக்கு ஆரம்பமான பொன் விழா நிகழ்வில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே. எல். வசந்தகுமார ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பல்கலைக்கழகத்தின் ஐம்பது வருடகால கல்விப் பணி வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷமான 'யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்அகவை வரலாறு' எனும் நூலும், பல்கலைக்கழகத்தின் பொன்னகவையை நினைவு கூரும் வகையிலான நினைவு முத்திரை வெளியீடும் இந் நிகழ்வில் சிறப்பாக நடைபெற்றன.











# இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிழக்கு மாகாண ஆயுள்வேத திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் அனுசரணையுடன் இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது. இதில் சிரேஷ்ட ஆயுள்வேத வைத்திய நிபுணர், தேர்ச்சி பெற்ற ஆயுள்வேத வைத்தியர்களும் சிகிச்சை அளிப்பதற்காக வருகை தரவுள்ளனர்.

இந்த இலவச வைத்திய முகாமானது எதிர்வரும் 07 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 10 மணி தொடக்கம மதியம் 2 மணிவரை முள்ளிப்பொத் தானை 96, அக்ரபோதிய விகாரையில் இடம் பெறவுள்ளது. இதில் பின்வரும் சேவைகளை பொது மக்கள் முற்றிலும் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

சீனி நோயிக்கான இரத்த பரிசோ தனை, ஆலோசனை, சிறுநீரக நோய்க் கான விஷேட வைத்திய சிகிச்சை முறை கள், ஆலோசனை, பக்கவாதம் , முழங்கால் வலி ,முதுகு வலி , இடுப்பு வலி , தசை பிடிப்பு போன்ற நோய்களுக் கான விஷேட வைத்திய சிகிச்சை, அக்குபஞ்சர், கப்பிங், பத்து கட்டுதல், சீனி வியாதிக்கான நாட்பட்ட காயங்க ளுக்கான மருந்து கட்டுதல் போன்ற வற்றுக்கான சிகிச்சைகள்.

அனைவரையும் கலந்துகொண்டு சிகிச்சைகளையும், ஆலோசனைகளை யும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.




# மானிப்பாய் பிரதேச சபையின் நூலகங்களில் வாசிப்பு மாத நிகழ்வு

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் கீழ் இயங்கும் மானிப்பாய், ஆனைக்கோட்டை, மாதகல், பண்டத்தரிப்பு ஆகிய பொது நூலகங்களில் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய வாசிப்பு மாத போட்டிகள் ஆரம்பமாகியுள்ளது.

மேற்படி பொது நூலகங்களில் “மறுமலர்ச்சிக்காக வாசிப்போம்” எனும் தொனிப் பொருளில், வாசகர் மற்றும் மாணவர்களிடையே பல்வேறு போட்டி நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கு தரம் 1-3, தரம் 4-5, தரம் 6-8, தரம் 9-11, தரம் 12-13, வரையான வகுதிகளில் வாசிப்பு, திருக்குறள் மனனப் போட்டி, கட்டுரை, பேச்சு, கவிதை, சித்திரம் வரைதல், பொது அறிவு, துண்டுப்பிரசுர வெளியீடு, புதிய நூல்களின் கண்காட்சி மற்றும் சிறார்களுக்கான பொழுது போக்கு நிகழ்வு போன்ற போட்டிகளும், முன்பள்ளி மாணவர்களுக்கு கதைகூறல், நிறம் தீட்டுதல், எண்கள் மற்றும் எழுத்துகளை இணைத்தல் போன்ற போட்டிகளும் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் நாளை (07) ஆரம்பமாகி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

எனவே, போட்டிகளில் கலந்து கொண்டு மாணவர்கள் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்துமாறு மானிப்பாய் பிரதேச சபையின் நூலகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# “நீதி மறைந்த நாள்கள்”

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் எண்களாலும் புள்ளி விவரங்களாலும் மட்டுமே அளவிடப்பட்டது. அது மக்களின் அன்றாட வாழ்வில் நீதியும் சமநிலையும் எவ்வாறு பிரதிபலிக்கப்படுகிறது என்பதிலேயே உண்மையான அளவுகோல் இருக்கிறது.

இன்று இலங்கையில் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் கிண்ணியா பாலம் கட்டப்படாமை, மன்னார் காற்றாலைத் திட்டம், பெண்கள் மீதான துஷ்பிரயோகம், கல்வி மற்றும் சுகாதார குறைபாடு, பொருளாதார நெருக்கடி என இவை அனைத்தும் ஒரு பொதுவான உண்மையை வெளிப்படுத்துகின்றன: வளர்ச்சி என்ற பெயரில் எடுக்கப்படும் அரசின் முடிவுகள் பெரும்பாலும் மக்களின் உரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. சட்டங்களும் கொள்கைகளும் காகிதத்தில் மட்டுமே நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் வாழ்வின் நிஜத்தில் மக்கள் தொடர்ந்து அநீதி அனுபவிக்கிறார்கள். இந்த நிலையில், மக்களின் கூற்றுகள் அரசின் வாக்குறுதிகளைவிட அதிக நம்பகத்தன்மையைக் கொண்டுள்ளன என்பது வருத்தமான உண்மையாகும்.

நம் சமூகத்தில் நாள்தோறும் எதிர்கொள்ளும் சவால்கள் வெறும் தனிநபர் பிரச்சினைகளாக அல்லாது, மக்கள் அனைவரின் வாழ்வாதாரத்தைத் தீர்மானிக்கும் அமைப்பு சார்ந்த பிரச்சினைகளாகவே உருவெடுக்கின்றன. இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் முறையிலிருந்து மக்கள் தினசரி பயணிக்கும் பாலங்கள்வரை அனைத்திலும் ஒரு அரசியல் பொருளாதார பிணைப்பு காணப்படுகிறது. இதனால் மக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் வெறும் பொருளாதார குறைபாடுகளாக இல்லாமல், சமூக நீதி பற்றாக்குறையின் அடையாளமாகவும் வெளிப்படுகின்றன.

உதாரணமாக, மன்னாரில் காற்றாலை திட்டங்கள் குறித்தும் மக்களின் நிலைப்பாடு பல்வேறு கோணங்களில் வெளிப்படுகின்றன. அரசு இதனை பொருளாதார முன்னேற்றத்துக்கும் வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதற்குமான வாய்ப்பாகக் காண்கிறது. ஆனால் அங்குள்ள மீனவர்கள் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற அச்சத்தையும் கடல்சார் சூழல் அழியுமோ என்ற கவலையையும் வெளிப்படுத்துகின்றனர். இதனால் வளர்ச்சியும் வாழ்வாதாரமும் இடையே நிலைக்கும் முரண்பாடு வெளிப்படையாகிறது.

இதேபோல், கிண்ணியாவில் மக்கள் அன்றாடம் பயன்படுத்திய படகு மூழ்கியதில் பல உயிர்கள் பலியாகி பாலம் கட்டப்பட வேண்டும் என்ற மக்களின் கோரிக்கை வலுத்தது. ஆனால் அரசின் வாக்குறுதிகள் நிறைவேறாமல் காலம் கடந்ததால் மக்கள் தங்கள் உரிமையை வலியுறுத்தி போராட்டம் நடத்தினர். இதன் மூலம் மக்கள் எதிர்பார்ப்புக்கும் அரசு செயல்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளி தெளிவாக வெளிப்பட்டது.

இதனுடன், அன்றாடம் ஊடகங்களில் இடம் பெறும் பெண்கள் மீதான துஷ்பிரயோகச் சம்பவங்களும் சமூகத்தில் நிலவும் அதிகார சமநிலையின்மையைப் பிரதிபலிக்கின்றன. பல்வேறு சட்டங்களும் பாதுகாப்பு அமைப்புகளும் இருந்தாலும், நடைமுறை பாதுகாப்பு குறைவாகவே உள்ளது என்பதைக் குறிப்பது மக்கள் கூற்றுகளில் இருந்தே வெளிப்படுகிறது. இதுவும் சமூக நீதி குறைபாட்டின் இன்னொரு முகமே.

மேலும், மக்கள் சத்தமாக எதிர்வினை தெரிவித்த போதிலும் அரசு எடுத்துக்கொள்ளும் முடிவுகள் எப்போதும் மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் அமையவில்லை என்ற குற்றச்சாட்டுகள் எழுகின்றன. எடுத்துக்காட்டாக, எரிபொருள் விலை உயர்வு தொடர்பாக பொதுமக்களின் நலனைக் கவனிக்காமல் வெளிநாட்டு நாணயச் சிக்கலை முன்னிறுத்தி மட்டுமே முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்பது மக்கள் கூற்றாக இருக்கிறது.

இந்தச் சூழ்நிலைகளில் மக்கள் நலனைப் பிரதானமாகக் கருதாமல் வளர்ச்சி என்ற பெயரில் எடுக்கப்படும் திட்டங்கள் மக்கள் போராட்டங்களுக்கு வழிவகுக்கின்றன. உதாரணமாக, கொழும்பு போர்ட்



சிட்டி திட்டம் வளர்ச்சியின் அடையாளமாகச் சொல்லப்பட்டாலும், சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் மீனவர்களின் வாழ்வாதார சிக்கல் குறித்த மக்கள் கவலைகள் புறக்கணிக்கப்பட்டதாக அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

அதேநேரம், கல்வி துறையில் காணப்படும் பிரச்சினைகளும் மக்கள் குரலால் அரசைச் சவாலுக்கு உள்ளாக்குகின்றன. பல கிராமங்களில் பள்ளிகள் மூடப்படுவதோடு ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படும் நிலையில், மக்கள் குழந்தைகளின் கல்வி உரிமை புறக்கணிக்கப்படுகிறது என்று வலியுறுத்துகின்றனர். இது சமூக சமநிலைக்கு பெரிய சவாலாகவே உள்ளது.

இதனோடு சுகாதாரத் துறையில் மருந்து பற்றாக்குறை மற்றும் மருத்துவ உபகரணங்களின் குறைபாடு மக்கள் வாழ்வை நேரடியாக பாதிக்கிறது. மருத்துவமனைகளில் நோயாளிகள் சந்திக்கும் கஷ்டங்களை ஊடகங்கள் வெளிச்சமிட்டபோதும், அரசின் நடவடிக்கை போதாமை குறித்து மக்கள் தொடர்ந்து குற்றம் சாட்டுகின்றனர். இது நம் சமூகத்தில் நீதி நிலைநாட்டப்படுவதில் ஏற்பட்டுள்ள குறைபாட்டை மீண்டும் வெளிப்படுத்துகிறது.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்களின் நம்பிக்கை குறைந்து போனதாகவே பலர் கூறுகின்றனர். தேர்தல் காலத்தில் வழங்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேறாமல் போவதும், ஊழல் குற்றச்சாட்டுகள் அதிகரிப்பதும் மக்கள் மத்தியில் அரசியல் அமைப்பின் மீதான எதிர்மறையான மனநிலையை உருவாக்குகின்றன. இது சமூக நீதிக்கான போராட்டத்தை மக்கள் தங்களே மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்குகிறது.

வேலைவாய்ப்பு குறைபாடு இலங்கையில் பல பகுதி, கிராமப்புறங்கள், நகர்ப்புறங்களில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ளன. அரசு தொழில் வாய்ப்பு ஏற்படுத்தும் திட்டங்களை அறிவித்தாலும், மக்கள் கூறுவது, “விரிவான வேலை வாய்ப்புத் திட்டங்கள் இருக்கின்றன, ஆனால் நேரடி நன்மை எங்களுக்கு இல்லை” என்பதாகும். தொழிலாளர் சட்டங்கள் (Employment and Labour Relations Act, 1970) வேலைவாய்ப்புப் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்றாலும், நடை முறையில் இது குறைவாக பூர்த்தியடைகிறது. சமூக ஆராய்ச்சியாளர்கள் கூற்று தருகின்றனர், “இளைஞர்கள் கல்வி முடித்தாலும் வேலை கிடைக்காததால் வெளி நாடுகள் நோக்கி ஓடுகின்றனர். இது மக்கள் உரிமைக்கு எதிரானது” எனப்பல ஊடகங்கள் இந்த நிலையை வெளிப்படுத்தியுள்ளன. மக்கள் கூட்டங்களிலும், சமூக ஊடகங்களில் இதற்கான விமர்சனங்கள் பரவுகின்றன. அரசு நிதி ஒதுக்கீடு செய்தாலும், திட்டமிடல் மற்றும் நடைமுறை தாமதம் காரணமாக மக்கள் உண்மையான பயன்களைப் பெறவில்லை.

பெண்கள் மீதான வன்முறை அதிகரித்து வருகிறது. “பெண்கள் பாதுகாப்பு சட்டம் 2005” மற்றும் “Domestic Violence Act 2002” ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன, ஆனால் நடைமுறை தாமதம், நீதிமன்ற வழக்குகளில் தாமதம் காரணமாக பெண்கள் உயிரிழக்கின்றனர் அல்லது பாதிக்கப்படுகின்றனர். மக்கள் கூறுவது, “நீதிமன்றம் வழக்குகளை நீண்ட நாள்கள் நிலைத்து

தொடர்ச்சி▼

# "நீதி மறைந்த நாள்கள்"

**தொடர்ச்சி▲**

விடுகிறது குற்றவாளிகள் தப்புகின்றனர்". ஊடகங்கள், சமூக அமைப்புகள் இந்த நிலையை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, கொழும்பு மாவட்டத்தில் 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட புகார்களில் 40 வீதம் வீட்டுப் பெண்கள் வன்முறைக்கு ஆளாகியுள்ளனர். இது சமூக நீதி குறைபாட்டை வெளிப்படுத்துகிறது. அரசு பெண்கள் பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கினாலும், நடைமுறையில் பயனில்லை என்பதே மக்களின் கூற்று.

கல்விக் குறைபாடு கிராமப்புற பள்ளிகளில் அடிப்படை வசதிகள் இல்லாமை, ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் கல்வி உபகரணங்கள் குறைவானது கல்வி உரிமையை பாதிக்கிறது. "Education Act 1980" இலங்கையில் அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி வழங்குவதை வலியுறுத்துகிறது. ஆனால் மக்கள் கூறுவது, "நாங்கள் சிறந்த கல்வி பெற முடியவில்லை ஆசிரியர்கள் குறைவாக இருக்கின்றனர் குழந்தைகள் பாதுகாப்பற்ற பாதையில் செல்ல வேண்டி வருகிறது" என்பதாகும். சமூக ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஊடகங்கள் இதனைச் சான்றாக வெளியிட்டுள்ளன. மக்கள் கூற்றுகள் அரசின் வாக்குறுதிகளைப் சோதிக்கும் வகையில் பயன்படுகின்றன.

சுகாதார சேவைகள் பற்றாக்குறை குறித்துப் பார்த்தால் மருத்துவமனைகள், மருந்து, மருத்துவ உபகரணங்கள் குறைவானது மக்களுக்கு நேரடி பாதிப்பை ஏற்படுத்துகிறது. "Health Service Act 1980" அரசு அடிப்படை சுகாதார சேவையை வழங்க வேண்டும் என்று கூறுகிறது. ஆனால் மக்கள் கூறினார்கள், "ஒரு மாத்திரை மருந்துக்கும் எட்டு மருத்துவமனைகள் சுற்றவேண்டிய நிலை" இது அரசு நடவடிக்கையின் குறைபாடு. சமூக அமைப்புகள், ஊடகங்கள் இதனை சான்று காட்டுகின்றன. மக்கள் அனுபவங்கள் நீதிமன்ற வழக்குகள், அதிகாரிகள் தாமதம் ஆகியவற்றுடன் இணைந்துள்ளது.

இது மட்டுமா? சுற்றுச்சூழல் அழிவு எனும்போது, காடுகள் அழிக்கப்படல், மணல் கொள்ளை, பிளாஸ்டிக் கழிவு, நீர் மற்றும் மணல் வளங்கள் குறைவு மக்கள் வாழ்விடத்தை பாதிக்கிறது. "Environmental Protection Act 1980" மற்றும் "Forest Conservation Ordinance" சட்டங்கள் உள்ளது. மக்கள் கூறுவது, "அரசாங்க வளர்ச்சி திட்டங்கள் எங்கள் வாழ்விடம் அழிக்கிறது சட்டம் பின்பற்றப்படவில்லை" என்பதாகும். சமூக ஆராய்ச்சி மற்றும் ஊடகங்கள் இதனை ஆதாரமாக வெளியிட்டுள்ளன. மக்கள் கூற்றுகள், அரசின் அலட்சியம் மற்றும் சமூக நீதி குறைபாட்டை வெளிப்படுத்துகின்றன.

சமீபத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியில் அத்தியாவசிய பொருட்கள் பற்றாக்குறை ஏற்பட்டபோது மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து உணவுப் பொருள்களை பெற்றனர். அன்றாட வாழ்வின் இந்த துன்பம் சமூக நீதி எவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ளது என்பதை நேரடியாக காட்டுகிறது. மக்கள் "நீதி என்றால் வெறும் சட்டமல்ல, வாழ்வதற்கான உரிமை" என்ற கூற்றையும் வலியுறுத்தினர்.

இத்தகைய சூழ்நிலையில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் போன்ற பாதிக்கப்படும் குழுக்கள் அதிகமான துன்பங்களை அனுபவிக்கிறார்கள். குறிப்பாக, பெண்கள் தொழில் சந்தையில் சம வாய்ப்புகள் கிடைக்காமல், குடும்பத்தில் வன்முறைக்கு உள்ளாகும்போது சமூக நீதி பற்றாக்குறை இரட்டிப்பாகிறது. மக்கள் கூற்றுகளிலும் "பெண்களுக்கு பாதுகாப்பு எங்கே?" என்ற கேள்வி தொடர்ந்து ஒலிக்கிறது.

அரசின் திட்டங்கள் மக்களின் பங்கேற்பின்றி எடுக்கப்படுவதும் பிரச்சினையின் மூல காரணமாகத் திகழ்கிறது. மக்கள் பங்கேற்பு இல்லாத திட்டங்கள் செயல்படுவதில் தோல்வியடையும் என்பதை கிண்ணியா பாலம் போன்ற உதாரணங்களே காட்டுகின்றன. இதனால் மக்கள் கூற்றுக்கள் "நம்மை கேட்காமல் எடுக்கும் முடிவு எப்போதும் நன்மை தராது" என்று வலியுறுத்துகின்றன.

சமூக நீதி குறைபாட்டை எதிர்த்து மக்கள் குரல் கொடுப்பது அதிகரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. ஆர்ப்பாட்டங்கள், ஊடகங்களில் கருத்துக்களை வெளிப்படுத்துதல், சமூக ஊடகங்களில் குரல் கொடுப்பது போன்ற பல வழிகள் மக்கள் பின்பற்றுகின்றனர். இது மக்கள் அரசியலின் பங்காளிகளாகத் தங்களை நிலைநாட்டும் முயற்சியாகவும் புரிந்துகொள்ளப்படுகிறது.

இதனோடு ஊடகங்களும் மக்கள் கூற்றுக்களை வெளிப்படுத்தும் மேடையாக மாறுகின்றன. ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் சமூக நீதி குறைபாட்டை வெளிப்படுத்தும் போது மக்களின் குரலுக்குத் தகுந்த இடம் கிடைக்கிறது. ஆனால் சில நேரங்களில் ஊடகங்களே அரசியல் அழுத்தங்களுக்கு உட்பட்டதாக மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இத்தகைய சூழலில் கல்வியாளர்கள், சமூக ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள் போன்றோரின் பங்கு முக்கியமாகிறது. அவர்கள் சமூகத்தின் உண்மையான நிலையை வெளிக்கொண்டு வருவதோடு, மக்கள் உரிமைகளை வலியுறுத்தும் குரலாகவும் செயல்படுகின்றனர். மக்கள் கூற்றுக்களில் "அறிவாளிகள் எங்களைப் பற்றி பேச வேண்டும்" என்ற கோரிக்கையும் அடிக்கடி கேட்கப்படுகிறது.

சமூக நீதி என்பது வெறும் சட்டரீதியான கருத்தாக அல்ல, அது மக்களின் அன்றாட வாழ்வில் அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அன்றாட வாழ்வில் ஏற்பட்ட சிக்கல்களை மக்கள் கூற்றுக்களுடன் இணைத்து ஆராயும்போது சமூக நீதியின் குறைபாடு எவ்வாறு மக்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கிறது என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

இதனால், அரசும் சமூக அமைப்புகளும் மக்களின் குரலைக் கவனமாகக் கேட்டு, அவர்களைப் பங்கேற்கச் செய்து மட்டுமே நிலையான தீர்வுகளை உருவாக்க முடியும். மக்கள் கூற்றுக்கள் அன்றாட வாழ்வின் அனுபவங்களில் இருந்து வந்தவை என்பதால் அவற்றை புறக்கணிப்பது சமூகத்தை மேலும் சிக்கலில் தள்ளும்.

முடிவாக, சமூக நீதி குறைபாடு என்பது வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் மிகப்பெரிய தடையாகவே உள்ளது. காற்றாலை, கிண்ணியா பாலம், பெண்கள் துஷ்பிரயோகம், பொருளாதார நெருக்கடி போன்ற பல உதாரணங்கள் மக்கள் அனுபவிக்கும் நிஜத்தை வெளிப்படுத்துகின்றன. மக்கள் கூற்றுக்களையும் அவர்கள் அனுபவங்களையும் ஆராய்ந்து பார்க்கும் போது, சமூக நீதியின் நிலை நம் நாட்டில் இன்னும் பலப்படுத்தப்பட வேண்டிய அவசியம் இருப்பது தெளிவாகிறது. இதுவரை காணப்பட்ட எல்லா சம்பவங்களும் காற்றாலை திட்டத்திலிருந்து கிண்ணியா பாலம் வரை, பெண்கள் துஸ்பிரயோகம் முதல் பொருளாதார அசாதாரணம்வரை ஒரே செய்தியை நமக்கு அளிக்கின்றன.

"சமூக நீதி இன்றும் எட்டாத கனவாகவே உள்ளது. மக்கள் குரலைக் கேட்காமல் எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் நிலையானதல்ல மாறாக அது புதிய போராட்டங்களையும் நம்பிக்கையிழப்பையும் மட்டுமே உருவாக்குகிறது. ஆகவே, சமூக நீதி என்பது ஆட்சி இயந்திரத்தின் விருப்பத் தேர்வாக அல்லாமல், மக்கள் வாழ்வில் உடனடி மற்றும் அவசியமான உரிமையாகக் கருதப்பட வேண்டும். மக்கள் அனுபவங்கள் அரசியல் உரைகளுக்குப் பெரிதான சாட்சிகளாக உள்ளதால், அவற்றை புறக்கணிப்பது வளர்ச்சியையே பின்தள்ளும். எனவே, விமர்சன பார்வையில் பார்த்தால், நம் நாட்டின் முன்னேற்றப் பாதை எண்களில் அல்ல, மக்களின் வாழ்வில் உண்மையான சமநிலை உருவாகும் தருணத்தில்தான் ஆரம்பிக்கிறது.

**அப்துல் அஸீஸ் அஸ்மா,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.




# அருந்ததி மாற்று மோதிரத்தின் ஏற்பாட்டில் ஜனவரியில் நடத்தப்படவுள்ள பயிற்சி வகுப்பு

## விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன

(அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் பெண் அழகுக் கலை நிபுணர்கள் இணைந்து ஏற்படுத்திய அருந்ததி மாற்று மோதிரம் எனும் அமைப்பினர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் மணப்பெண் வடிவமைப்பின் அழகு சாதனையாளர்கள். அதை துறை சார்ந்தவர்கள் அத்துடன் பாடசாலை விட்டு விலகிய மாணவிகளை இத்துறையில் ஊக்கப்படுத்தி பயிற்சியளித்து அவர்களுக்கு சுய தொழில் முயற்சியில் ஏற்படுத்தும் அவர்கள் படைப்புக்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதி கௌரவத்தை பெற்றுக் கொடுக்கும் நிறுவனமாகும்.

இந்த நிறுவனத்தினர் 2014 இல் ஆரம்பித்து கொழும்பு , கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் போட்டி நிகழ்சிகளை ஏற்படுத்தி அதற்கு விருதுகளை வழங்கி வருகின்றனர்.

இவர்களது ஏற்பாட்டில் எதிர்வரும் ஜனவரி 09, 10,11 ஆம் திகதியில் யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஒப்பனை கலை மற்றும் மணப் பெண் அழகுக் கலை வடிவமைப்பு, கேக் தயாரிப்பு மற்றும் வடிவமைப்பு அலங்காரம் போன்ற பல பயிற்சிகளை நடத்தப்படவுள்ளன.

அத்துடன் இது துறை சார்ந்தவர்கள் படைப்புகள், அவர்கள் உடை அலங்காரங்களை யாழ்ப்பாணத்தில் மேடையேற்றவுள்ளனர்.

இவ்விடயம் சம்பந்தமாக மாற்று மோதிரம் முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.கலாமோகன் தலைமையில் வெள்ளவத்தை நெல்லி ஹோட்டலில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது.

இந்த ஊடக மாநாட்டில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் ஈ.செந்தில்வேலவன், அழகு கலை நிபுணர்களான அனு குமரசேன், சங்கவின் அன்டன், கயல்விழி, ஜெயபிரகாஷ், மற்றும் ஜெயந்தி முரளி ஆகியோரும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஒப்பனை கலை மற்றும் மணப் அழங்காரம் பற்றி கருத்துக்களை முன் வைத்தனர்.

இந்த நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இராஜேஸ்வரி மண்டபம் மற்றும் தெல்லிப்பளையில் எதிர்வரும் ஜனவரி மாதம் 09,10,11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இதில் பயிற்சி பெறவுள்ளவர்கள் விண்ணப்பிப்பவர்களை ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் ஊடாக அருந்ததி, அருந்ததி மாற்று மோதிரம் முகநூலில் சமர்ப்பிக்க முடியும் என்று சங்கவின் அண்டன் தெரிவித்தார்.






# மட்டு. கல்வியியற் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியர் தின நிகழ்வு

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று (06) திங்கட்கிழமை உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டது.

ஆசிரியப் பயிலுனர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் கல்லூரியின் விரிவுரையாளர்கள் மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

அங்கு ஆசிரியர் கீதம் இசைக்கப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும் சிறப்புரைகளும் இடம்பெற்றன.



# அதிகளவு சமூக ஊடகங்கள் ஊடாக நான் பாதிப்படைந்து வருகின்றேன்!

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

சமூக ஊடகங்களுக்கு உரிய சட்டங்களைக் கொண்டுவரத்தான் வேண்டும். சமூக ஊடகங்கள் என்றால் அதற்கு ஒரு வரையறை இருக்கத்தான் வேண்டும். அதிகளவு சமூக ஊடகங்கள் ஊடாக நான் பாதிக்கப்படுகின்றவன் என்ற அடிப்படையில் சமூக ஊடகங்களுக்கு உரிய வரையறை இருக்கத்தான் வேண்டும் என்னும் கருத்துடன் ஒத்துப் போகின்றேன். சமூக ஊடகங்களில் பல நன்மை தருவனவாகவும் இருக்கத்தான் செய்கின்றன. சமூக ஊடகங்களைப் பாவித்து நன்மை அடைந்தவர்கள் இருக்கின்றார்கள். பாதிக்கப்படுபவர்களும் இருக்கின்றார்கள்.

அந்த வகையில் சமூக ஊடகங்களை ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு சட்டத்துக்குக் கொண்டு வரத்தான் வேண்டும். ஆனால் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் என்பது அதற்குரிய பதிலீடா என்று கேட்டால் அது இல்லை என்று தான் கூறுகின்றேன்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சமூக ஊடக பிரகடனம் 2.0 சமூக ஊடக பாதுகாப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு, ஜனநாயக மதிப்புகள் தொடர்புடைய சிக்கல்கள் தொடர்பான விழிப்புணர்வு உருவாக்கும் திட்டம் மட்டக்களப்பு, கல்லடி தனியார் விடுதியில் சனிக்கிழமை (04) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இலட்சுமணன் தேவஅதிரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்த போது அதற்கு எதிராக நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் மிகக் கடுமையாக கருத்துக்களை தெரிவித்துச் செயல்பட்டவர்கள் நாங்கள்.

நிகழலை காப்பு சட்டத்தில் இருக்கும் மிகவும் ஆபத்தான விடயம் என்னவெனில் அதற்காக வேண்டி ஒரு ஆணைக் குழு ஒன்று நியமித்திருக்கின்றார்கள். அந்த ஆணை குழுக்களின் பிரதிநிதிகளை நியமிப்பவர் ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரில் அமைச்சர் நியமிப்பார். அந்த ஆணை குழு நாட்டில் இருக்கும் சமூக ஊடகங்களை கையாளுமாக இருந்தால் அது ஒரு அபாயகரமாக இருக்கும். இதற்காக நாங்கள் அதனை மிகவும் கடுமையாக எதிர்த்திருந்தோம். ஆகவே அதற்கு மாற்று வழியாக நாங்கள் கூறியது என்னவெனில், அதற்குச் சட்டரீதியாக ஒரு வழிவகையை வழங்குங்கள் என்பதுதான்.

ஒருவர் சமூக ஊடகத்தில் இன்னும் ஒருவரை பற்றி அவதூறாக தெரிவிக்கும் பட்சத்தில் அதற்கு ஆணைக் குழுவுக்கு பதில் வழங்கும் அதிகாரத்தை கொடுக்காமல் மாறாக நீதிமன்றத்தை




நாடுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள் என நாங்கள் கேண்டிருந்தோம்.

தேசிய மக்கள் சக்தி அரசு வரும் போது நிகழ் நிலைக் காப்புச் சட்டத்தை நீக்குவோம் என அவருடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார்கள். அதுபோல் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவோம் எனவும் தெரிவித்திருந்தார்கள். இப்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு பதிலாக பிறிதொரு சட்டத்தை கொண்டு வருவதாக தெரிவிக்கின்றார்கள். என்னைப் பொறுத்தவரையில் நிகழ்நிலை காப்புச் சட்டத்தையும் இவ்வாறு நீக்காமல் அதற்கும் மாற்றாக இன்னும் ஒரு சட்டத்தை கொண்டு வருவார்கள் என நாங்கள் நினைக்கின்றோம். அந்த வகையில் எங்களுடைய கருத்துக்களை அதில் கொடுக்கக்கூடிய நிலைமை வரவேண்டும்.

எனவே இது ஒரு மிகவும் முக்கியமான விடயம். பொறுப்பு வாய்ந்த சமூக ஊடகங்கள் தொடர்பான சட்டத்தை கொண்டு வருவதற்கு எங்களுடைய முழுமையான ஆதரவும் முழுமையான ஒத்துழைப்பும் இருக்கும். - என்றார்.

# கரூர் சம்பவம்:
# சிறப்பு புலனாய்வு விசாரணை குழு நெரிசல் ஏற்பட்ட இடத்தில் ஆய்வு

கரூர் த.வெ.க. கூட்ட நெரிசல் உயிரிழப்பு தொடர்பாக ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நேற்று தொடங்கியது.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்ரெம்பர் 27 ஆம் திகதி த.வெ.க. தலைவர் விஜய் கலந்துகொண்ட பிரசாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்த உயர் நீதிமன்ற முன்னாள் நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்து, முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டார். மறுநாளே விசாரணையை தொடங்கிய நீதிபதி அருணா ஜெகதீசன், 2 நாள்கள் விசாரணை நடத்தினார்.

இதற்கிடையே, நெரிசல் சம்பவம் தொடர்பாக கரூர் நகர பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். த.வெ.க. கரூர் மேற்கு



மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், நிர்வாகி பவுன்ராஜ் ஆகிய 2 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், கட்சியின் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல்குமார் ஆகியோரை தேடி வருகின்றனர்.

இந்த சூழலில், வழக்கை விசாரிக்க வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த குழுவில் எஸ்.பி.க்கள் விமலா, சியாமளா தேவி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இந்நிலையில், ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையிலான சிறப்பு புலனாய்வுக் குழுவினர் நேற்று கரூர் வந்து விசாரணையை தொடங்கினர். த.வெ.க. பிரசாரகூட்டம் நடைபெற்ற வேலுசாமிபுரத்துக்கு சென்ற குழுவினர், நெரிசல் ஏற்பட்ட பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

சைபர் க்ரைம் உதவி ஆய்வாளர் சுதர்சன், கரூர் நகர காவல் நிலைய தனிப்பிரிவு காவலர் மோகன்ராஜ் ஆகியோரிடம் அஸ்ரா கார்க் கேட்டறிந்தார். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்த குழுவில் என்னுடன் 2 எஸ்.பி.க்கள், ஒரு ஏடிஎஸ்.பி, 2 டி.எஸ்.பிக்கள், 5 ஆய்வாளர்கள் இடம்பெற்றுள்ளனர். தற்போது தான் விசாரணையை தொடங்கி உள்ளதால், குறிப்பிட்டு எதுவும் கூறமுடியாது." என்றார்.

# மேற்கு வங்கம் மாநிலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 24 பேர் உயிரிழப்பு

டார்ஜிலிங்கின் மலைகள் மற்றும் அதை அண்மித்த பகுதிகளில் நேற்று பெய்த தொடர் மழையால் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் சிக்கி குழந்தைகள் உட்பட 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் நேற்று பெய்த கனமழையால் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டன, வீதிகள் துண்டிக்கப்பட்டன. இந்த நிலச்சரிவில் சிக்கி 24 பேர் உயிரிழந்தனர், பலர் காணாமல் போயுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். தேசிய பேரிடர் மீட்புப் படை, மாநில பேரிடர் மீட்புப்படை, பொலிஸ் உள்ளிட்டவை மீட்புப்பணியில் ஈடுபட்டுள்ளன.

இதுகுறித்து மேற்கு வங்கத்தின் டார்ஜிலிங் மற்றும் ஜல்பைகுரி மாவட்ட நிர்வாகங்கள் வெளியிட்ட அறிக்கைகளில், சர்சாலி, ஜஸ்பிர்கான், மிரிக் பஸ்தி, தார் காவ்ன் (மெச்சி), மிரிக் ஏரிப் பகுதி மற்றும் ஜல்பைகுரி மாவட்டத்தில் உள்ள நக்ரகாட்டா பகுதி ஆகிய பல



இடங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டன என தெரிவித்துள்ளன.

2015 ஆம் ஆண்டு டார்ஜிலிங்கில் ஏற்பட்ட நிலச்சரிவில் கிட்டத்தட்ட 40 பேர் உயிரிழந்த சம்பவத்துக்கு பிறகு ஏற்பட்ட மிக மோசமான நிலச்சரிவு இது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஸ்பெயின் கார் பந்தயத்தில் 3 ஆவது இடம்: அஜித்குமாருக்கு உதயநிதி ஸ்டாலின் பாராட்டு

ஸ்பெயினில் நடைபெற்ற கார் பந்தயத்தில் 3 ஆவது இடம் பிடித்த நடிகர் அஜித்குமார் அணிக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஸ்பெயினில் ஐரோப்பிய எண்டுரன்ஸ் சாம்பியன்ஷிப் தொடர் கார் பந்தயத்தில் அஜித் அணி ஒட்டுமொத்தமாக 3 ஆவது இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. இதையொட்டி, அவருக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைதள பதிவில் குறிப்பிடுகையில்,



"பார்சிலோனாவில் நடந்த 24 மணி நேர கார் பந்தயத்தில் நடிகர் அஜித் குமாரின் அணி ஒட்டுமொத்தமாக 3 ஆவது இடம் பிடித்திருப்பதை அறிந்து மகிழ்கிறேன். இந்த வெற்றியின் மூலம் உலக அளவில் கார் பந்தயத்தில் இந்தியாவையும், தமிழகத்தையும் பெருமையடைய செய்த நடிகர் அஜித்குமாருக்கும், அவரது குழுவினருக்கும் வாழ்த்துகள்.

மேலும், இந்த சர்வதேசப் போட்டியின்போது, கார், பந்தய உபகரணங்கள், ஜெர்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இலச்சினையை பயன்படுத்தியதற்காக தமிழக அரசு சார்பில் அவருக்கும், அவரது குழுவினருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அவரது அணி இன்னும் பல வெற்றிகளை குவிக்கட்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.



# அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு!

## 20 பேர் காயம்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் 20 பேர் காயமடைந்துள்ளதுடன், சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகமான பொதுமக்கள் நடமாடிய பகுதியில் இந்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றிருந்ததுடன், துப்பாக்கிதாரி சுமார் 100 தடவைகளுக்கு மேலாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார் என பொலிஸார் தெரித்துள்ளனர்.

இந்நிலையில், துப்பாக்கிச்சூடு நடத்திய 60 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் இந்த தாக்குதல் பயங்கரவாத தாக்குதல் அல்ல என பொரிசார் அறிவித்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து இரண்டு ரைஃபிள் ரக துப்பாபக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது

அவுஸ்திரேலியாவில் இவ்வாறான துப்பாக்கிச் சூடடுச் சம்பவங்கள் நடப்பது குறைவானது என பொலிஸார் சுட்டிக்காட்டியுள்ளதுடன், துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் சந்தேக நபர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, காயங்களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் சந்தேகநபர் எதற்காக இதனை மேற்கொண்டார் என்பது தொடர்பாக இதுவரை எந்த தகவலும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.










# திபெத்தில் எவரெஸ்ட் சிகரத்தில் பனிப்புயலில் 1,000 பேர் சிக்கினர்

திபெத்தில் எவரெஸ்ட் சிகரத்தின் கிழக்குப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான பனிப்புயலில் சிக்கிய சுமார் 350 மலையேற்ற வீரர்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.சுமார் 1,000 பேர் மலையிலிருந்து இறங்க முடியாமல் பனிப்புயலில் சிக்கியுள்ளனர்.

இதற்கமைய ஏனையோரை மீட்கும் பணியில் மீட்புப்படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என செய்திகள் வெளியாகியுள்ளன.



# இஸ்ரேல் - ஹமாஸ் பேச்சுவார்த்தை தொடர்பில் வேகமாகச் செயற்படுமாறு ட்ரம்ப் கோரிக்கை

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையிலான மறைமுக போர்நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் இன்று எகிப்தில் நடைபெறுகின்றன.

இந்தநிலையில் காசா போரை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் "வேகமாக செயற்பட வேண்டும்" என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் கட்டார் நாடுகளின் மத்தியஸ்தர்களும் இப் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்கவுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



# பிரான்ஸ் பிரதமர் செபாஸ்டியன் பதவி விலகுவதாக அறிவித்தார்

பிரான்ஸ் பிரதமர் செபாஸ்டியன் லெகோர்னு தனது பதவியை விட்டு விலகியுள்ளார்.

2025 செப்டம்பர் 9 ஆம் திகதியன்று பிரான்ஸின் 47 ஆவது பிரதமராக இவர் நியமிக்கப்பட்டு 27 நாள்களே ஆகியுள்ள நிலையில் அவர் இந்த தீர்மானத்தை அறிவித்துள்ளார்.

முன்னதாக செபஸ்டியன் பிரதமராக நியமிக்கப்பட்ட சில மணி நேரத்திற்குள், தனது அமைச்சரவை உறுப்பினர்களை அறிவித்தார்.

அந்த அறிவிப்புக்கு பிறகு, பல்வேறு கட்சிகளும் அவரின் அமைச்சரவையை எதிர்த்து நம்பிக்கையில்லா வாக்கெடுப்பு கோரியுள்ளன.

இதனால் அரசியல் குழப்பம் மேலும் தீவிரமாகியிருந்தது, இவ்வாறானதொரு பின்னணியில், அவரது பதவிவிலகல் பிரான்ஸ் அரசியலில் மேலும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் இவரின் இந்த பதவி விலகலை ஏற்றுக் கொண்டுள்ளார் என கூறப்படுகிறது.

மேலும் புதிய பிரதமர் நியமனம் தொடர்பான விவரங்கள் இன்னும் வெளியாகவில்லை.

பக்கங்கள் - 02

கனடா முரசு

திங்கட்கிழமை 06/10/2025

## கனடாவின் ஒட்டாவாவில் அதிக வெப்பநிலை பதிவு



C2▶




# மாண்ட்ரியால் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி

கனடாவின் மாண்ட்ரியால் நகரில் உள்ள பிளாட்டோ பகுதியில் இயங்கிக் கொண்டிருந்த ஒரு மதுபானசாலை வளாகத்தில் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் இரு ஆண்கள் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொன்ட்- ரொயல் அவென்யூ மற்றும் லவல் அவென்யூ சந்திப்பில் உள்ள எம்.ஆர். 250 பார் லொங் பகுதியில் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தபோது இரண்டு ஆண்கள் துப்பாக்கிச்சூட்டில் பலியான நிலையில் மீட்கப்பட்டனர் என தெரிவித்துள்ளனர்.

C2▶

# கனடாவில் மீளப்பெறப்படும் டொயோட்டா வாகனங்கள்

கனடாவில் பாதுகாப்பு காரணங்களுக்காக ஆயிரக் கணக்கான டொயோட்டா ரக வாகனங்கள் திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவில் மொத்தம் 32,733 வாகனங்களை திரும்பப் பெறுவதாக கனடிய போக்குவரத்து திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் பின்புறக் கமரா செயலிழக்கவோ அல்லது சரியாக படம் காட்டாமலோ இருக்கக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"பின்புறக் கமரா சரியாக இயங்கவில்லை என்றால், வாகனம் பின்நோக்கிச் செல்லும்போது சாரதி பின்னால் காணும் திறன் குறையக்கூடும்.




இது விபத்துக்கான ஆபத்தை அதிகரிக்கலாம்," என்று அறிவிப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட மொடல்கள் இந்த திரும்பப் பெறல் நடவடிக்கை 14 அங்குல மல்டிமீடியா டிஸ்ப்ளே பொருத்தப்பட்ட சில மொடல்களை உள்ளடக்கியது:

டொயோட்டா சீக்வோயா - 2023, 2024, 2025

டொயோட்டா டன்ட்ரா - 2022, 2023, 2024, 2025

டொயோட்டா நிறுவனம் உரிமையாளர்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பை அனுப்பி, வாகனங்களை அங்கீகரிக்கப்பட்ட சேவை மையத்துக்குக் கொண்டு சென்று டிஸ்ப்ளே மென்பொருளை புதுப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பயனர்கள் தங்கள் வாகனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய 1-888-869-6828 என்ற எண்ணில் அழைக்கவோ அல்லது வழலழவய நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் சரிபார்க்கவோ முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நிதி நிறுவனம் தொடர்பில் பொதுமக்களுக்கு எச்சரிக்கை

வட வான்கூவரை தளமாகக் கொண்ட பைன் இன்வெஸ்ட்மென்ட் என்ற நாணய மாற்று நிறுவனத்துடன் எந்தவித பண வைப்பு தொடர்பும் வைக்கக் கூடாது என பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் நிதிச் சேவை ஆணையம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

மாநில நிதி நிறுவன சட்டம் மீறப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில், இந்நிறுவனத்தின் மீது விசாரணை நடத்தப்படுகிறது.

நிக் பினான்சியல் மற்றும் அதன் ஒரே இயக்குநர் அலி நிக்பர்ஜம் ஆகியோர், நுகர்வோரிடமிருந்து பண வைப்பு செய்து, குறிப்பிட்ட காலத்திற்கு பின் நிச்சய வட்டி தரப்படும் என கூறி நாணய மாற்று திட்டத்தை நடத்தியுள்ளனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.



இந்த நடவடிக்கை, சட்டப்படி அனுமதியின்றி வைப்பு சேவையை மேற்கொண்டதாகக் கருதப்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.


பொதுமக்கள் இந்த நிறுவனத்தில் பணம் வைப்பு செய்ய வேண்டாம், அதன் இணையதளத்தை வழக்கமாகப் பார்வையிட்டு புதிய தகவல்களை அறியவும், சந்தேகம் இருந்தால் நேரடியாக ஆணையத்தைத் தொடர்புகொள்ளவும் பரிந்துரைத்துள்ளது.

தற்போதைய வாடிக்கையாளர்கள், நிறுவனம் மற்றும் ஒழுங்குமுறை ஆணையம் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் நகலைப் பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஒப்பந்தத்தில், நிறுவனம் மற்றும் நிக்பர்ஜம், உடனடியாக அனுமதியின்றி வைப்பு நடவடிக்கைகளை நிறுத்த, தாங்கள் சட்டபூர்வமாக வைப்பு சேவையை நடத்த அனுமதிக்கப்பட்டவர்கள் என்று கூறுவதை நிறுத்த, மேலும் நவம்பர் 15க்குள் அனைத்து வாடிக்கையாளர் பணத்தையும் திருப்பிச் செலுத்த ஒப்புக்கொண்டுள்ளனர்.

அனைத்து பணங்களும் நவம்பர் 17க்குள் திருப்பி வழங்கப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட வேண்டும் என நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான விசாரணை இன்னும் நடைபெற்று வருவதாகவும் ஒவ்வொரு மீறலுக்கும் அதிகபட்சம் 50,000 டொலர்கள் வரை நிர்வாக அபராதம் விதிக்கப்படும் வாய்ப்பு உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.



# கனடாவின் ஒட்டாவாவில் அதிக வெப்பநிலை பதிவு

கனடாவின் ஒட்டாவா நகரில் கடந்த 5ஆம் திகதி வரலாற்றிலேயே அதிக வெப்பநிலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிற்பகல் 1 மணிக்கு ஒட்டாவா விமான நிலையத்தில் 28.5 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகி, 1941ஆம் ஆண்டில் பதிவான 27.2 பாகை சாதனையை முறியடித்தது.

பின்னர்பிற்பகல்3மணியளவில்வெப்பநிலை உச்சமான 29.7 பாகையாக உயர்ந்தது. மாலை 5 மணியளவில் அது 28.2 பாகையாக குறைந்தது.

வழக்கமாக இந்த காலத்தில் ஒட்டாவாவில் சராசரி அதிகபட்ச வெப்பநிலை 15 பாகையாக இருக்கும்.

இரவு வெப்பநிலை 14 பாகையாக குறையலாம். திங்கட்கிழமை வெயில் அதிகமாகி 30 பாகை செல்சியஸ் வரை உயரும் எனவும், ஈரப்பதன் காரணமாக வெப்பநிலை 33 பாகை போன்றிருக்கும் எனவும் முன்னறிவிப்பு தெரிவிக்கிறது.

இது 1946இல் பதிவான 27.2 டிகிரி சாதனையையும் முறியடிக்கக் கூடும். செவ்வாயன்று மழை வாய்ப்புடன் வெப்பநிலை 24 பாகயைாகக் குறையக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

---

**மாண்ட்ரியால் நகரில்...**

**(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)**

இது ஒரு கொலைக்குப் பிறகு நடந்த தற்கொலை சம்பவம் என விசாரணையில் உறுதிசெய்யப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர் 40 வயதுடையவர் எனவும் தற்கொலை செய்து கொண்டவர் 30 வயதுடையவர் என கூறப்பட்டுள்ளது.

இந்த துயரமான சம்பவத்தின் பின்னணிக் காரணம் இதுவரை வெளிவரவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.